Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JULY 20, 2023

வியாழக்கிழமை ஜூலை 20, 2023 | ஒளி: 09 கதிர்: 044 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# குறைந்தாலும் குறையாது



கோதுமை மாவின் விலை குறைந்துள்ள போதிலும், பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளின் விலைகளை குறைப்பதற்கான இயலுமை இல்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பெருந்தோட்டத் தொழிலாளர்களின்

# பெயரை மாற்றுமாறு யோசனை



தோட்டத் தொழிலாளர்களை அந்தப் பெயரால் அழைப்பதை விட மலையக உழைக்கும் சமூகம் என்று அழைப்பதே சிறந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் என்று அழைக்கப்படும் மலையக உழைக்கும் சமூகம் நாட்டுக்கு அன்னிய செலாவணியை கொண்டு வருவதில் பெரும் பங்காற்றியுள்ள போதிலும், அவர்கள் வசதி குறைந்த நிலையில் இருப்பதாக குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நாள் சம்பளத்தை ரூ.3,000 ஆக கூட்டு

ரஞ்சித் ராஜபக்ஷ

நாட்டில் ஏற்பட்டிருக்கும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை 3 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்குமாறு அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

தொடர்ச்சி P2



## சாணக்கியனை தாக்க முயன்ற இருவரை தாக்கிய மூவர் கைது

கனகராசா சரவணன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனை தாக்க முற்பட்ட இருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் 3 பேரை கைது செய்துள்ளதாக தெரிவித்த மட்டு தலைமையக பொலிஸார், இச்சம்பவத்துடன் தொடர்புடைய 10 க்கு மேற்பட்டவர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர்கள் தலை மறைவாகியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## இருந்த நிலையில் இறந்த இளைஞன்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சொந்தமான விடுதியின் அருகில் உள்ள காணிக்குள் இருந்து கைகளில் வெட்டு காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நிறைவேறியது

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) திருத்தங்களுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்தின் குழு நிலையின் போது அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களு எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட ஒரு சில திருத்தங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவினால் 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் ஜூன் 21 மற்றும் ஜூலை 6 ஆகிய இரண்டு தினங்களிலும் இடம்பெற்றன.




## தொடர்ந்து சரியும் இலங்கை ரூபாய்

இலங்கை ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலையும் விற்பனை விலையும் புதன்கிழமை (19) மேலும் அதிகரித்தது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதத்தின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 315 ரூபாய் 26 சதமாகவும் விற்பனை விலை 328 ரூபாய் 92 இலங்கை சதமாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2



மலையக மக்களின் உரிமைக்காக

## மன்னார் முதல் மாத்தளை வரை நடைபயணம்

ஜே.ஏ.ஜோர்ஜ்

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மலையகத்துக்கு அழைத்து வரப்பட்ட மலையக மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆபத்தான பயணத்தை நினைவுகூரும் வகையில் மன்னாரில் இருந்து மாத்தளை வரையான பாதயாத்திரையொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நியமிக்காமல் தாமதிப்பது சதியின் ஒரு பகுதியே

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்காமல் காலதாமதம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை சதித்திட்டத்தின் ஒரு பகுதி என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## வேற்றுக்கிரக வாசிகளிடம் தமிழர் பிரச்சினை செல்லலாம்

### ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார் அமைச்சர் டக்ளஸ்




இலங்கையில் மழை பெய்தாலும் சர்வதேசம் குடைபிடிக்க வேண்டும் எனக் கூக்குரலிடுகின்ற இந்தத் தமிழ் அரசியல் தரப்பினருக்கு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நல்லதொரு பதிலை வழங்கியதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் வேற்றுக்கிரக வாசிகள் தலையிட வேண்டும் என்று சக தமிழ் தலைமைகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

அஸ்வெசும திட்டத்துக்கு

## அரச அதிகாரிகளின் பங்களிப்பு அவசியம்



“அஸ்வெசும” சமூக நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரச அதிகாரிகளின் செயலூக்கமான பங்களிப்பு இன்றியமையாதது என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வட மாகாண மக்களை நாம் வெறுப்பதில்லை

வ.சக்தி

அடைய முடியாத இலக்குகளுக்காக எம்மை மோத விட்டு அழிய விட்டது மட்டுமில்லாமல், தங்களது செயல்களை இன்னும் நியாயப்படுத்தும் இந்த சித்தாந்தக் காரர்களையே நாம் வெறுக்கிறோமே தவிர, நல்லூர் கந்தனையோ வடமாகண மக்களையோ நாம் என்றும் வெறுப்பதில்லை என்று இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



தமிழ் முற்போக்கு கூட்டணி

## சஜித்துடன் கைகோர்க்க இவையே காரணங்கள்

நாடெங்கும் பரந்து வாழும், பெருந்தோட்ட மக்களுக்கு வீடு கட்டி வாழவும், பயிர் செய்கை வாழ்வாதாரத்துக்கும் காணி வழங்கி, அவர்களை சிறுதோட்ட உரிமையாளராக்கும் எமது கொள்கையை சஜித் பிரேமதாச ஏற்றுக்கொண்டுள்ளமை ஐக்கிய மக்கள் கூட்டணியில்,

தொடர்ச்சி P2

# எங்களுக்கு கிடைத்த காணியில் ஹோட்டல் கட்ட இடமளியாதீர்

ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவை பெருந்தோட்ட நிறுவன நிர்வாகத்தின் கீழுள்ள நோர்வூட் நிவ்வெளி தோட்டத்தொழிலாளர் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு, காணித்தொடர்பிலான பிரச்சினைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அந்தத் தோட்டத்தில் பணியாற்றிய தோட்டத்தொழிலாளர்களுக்கு, தோட்ட நிர்வாகத்தால், தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு அண்மையில், 5 ஏக்கர் காணி, வீடுகளைக் கட்டிக்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளது.

எனினும், வெளியில் இருந்து வந்த நபரொருவர், இந்த காணி தங்களுடைய நிறுவனத்துடையது என்றும், அதில் ஹோட்டல் கட்டுவதற்காக, சுத்திகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும், தங்களுடைய பெற்றோருக்கு வழங்கப்பட்ட காணியை, வெளிநபர்களுக்கோ, நிறுவனத்துக்கோ வழங்கமுடியாது என்று அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# பெயரை மாற்றுமாறு யோசனை

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாததால், பள்ளிகளுக்குச் செல்வதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டியுள்ளதாகவும், மேலும், குறைந்த சுகாதார வசதிகளின் கீழ் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வறுமையிலிருந்து விடுபடவும் அரசாங்கம் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை, அண்மையில் தோட்டத் துறையில் ஈடுபட்டுள்ள குழுவினரை சந்தித்து கலந்துரையாடிய போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

நாட்டின் பொருளாதாரத்திற்காக தங்கள் பெரும் உழைப்பையும் முயற்சிகளையும் தியாகம் செய்தாலும்,கடினமான வாழ்க்கையை நடத்துபவர்களாக பெருந்தோட்ட சமூகத்தை அழைக்கலாம் என்றும்,தோட்ட மக்களை மாற்றாந்தாய் போல் கவனித்து தோட்ட மக்கள் தோட்டத் தொழிலாளர்கள் என்ற இடத்தில் நிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள தரிசு நிலங்களை பொருந்தோட்ட சமூகத்திற்கு வழங்கி,அவர்களை சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக உருவாக்கி, லயன் அறைக்கு விடைகொடுத்து சொந்த நிலத்தில் வீடொன்றை தயார்படுத்திக் கொடுப்பதே ஐக்கிய மக்கள் சக்தியினது நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

தோட்ட மக்கள் ஒவ்வொரு அரசியல்வாதிகள்,அரச அதிகாரிகளைப் பின்தொடர்ந்து மானியம் கோரி செல்லும் அடிமைப் பயணத்தை தடுத்து நிறுத்தி சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களக உருவாக்கி,தேயிலை உற்பத்தியில் ஈடுபாட்டுடன் பங்களிக்கும் வகையில் முன்னேற்றத்தை வலுப்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## குறைந்தாலும் குறையாது

இலங்கையின் முதன்மையான கோதுமை மா இறக்குமதியாளர்களான பிரீமா மற்றும் செரெண்டிப் ஆகிய நிறுவனங்கள் தமது கோதுமை மா விலைகளை குறைப்பதாக அறிவித்தன.

செவ்வாய்க்கிழமை (18) அமுலாகும் வகையில் 1 கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாயால் குறைப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனங்கள் அறிவித்தன.

அதற்கமைய, பாண் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விற்பனை விலை 200 ரூபாயாக குறைவடைந்துள்ளது.

எனினும், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்பட்டதால் அவற்றின் விலைகளை மீண்டும் குறைப்பதற்கான இயலுமை இல்லை என அவர் குறிப்பிட்டார்.

## நாள் சம்பளத்தை ரூ.3,000ஆக கூட்டு

அந்த சங்கம், ஹட்டனில் புதன்கிழமை (19) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அச்சங்கத்தின் செயலாளர் ஜே.எம்.ஏ.பிரேமரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது வழங்கப்படும் 1,000 ரூபாய் நாளாந்த சம்பளம் 2015 ஆம் ஆண்டு கோரப்பட்ட சம்பளமாகும். எனினும், அந்த சம்பளம் எட்டு வருடங்களுக்குப் பின்னர் கிடைத்துள்ளது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்குள் இச்சம்பளம் போதுமானதாக இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரதான உணவுகள் கோதுமைமாவினால் தயாரிக்கப்படுகின்றது. கோதுமையின் விலை ஒரு கிலோ கிராம் 10 ரூபாயால் குறைக்கப்பட்டாலும் அதனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்விதமான இலாபமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## இருந்த நிலையில் இறந்த இளைஞன்

யாழ்ப்பாணம் தாவடி கிழக்கு பகுதியை சேர்ந்த தர்மலிங்கம் பவிசன் (வயது 22) என்பவரே செவ்வாய்க்கிழமை (18) இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் காணப்பட்ட இடத்துக்கு அருகில் தேசிக்காய் , பீடி , தீப்பெட்டி , பியர் , சிரிஞ் உள்ளிட்டவை காணப்படுவதால் போதையில் கைகளை தானே வெட்டியதால், இரத்த போக்கு காரணமாக உயிரிழந்து இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்,போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் சுன்னாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சாணக்கியனை தாக்க முயன்ற இருவரை தாக்கிய மூவர் கைது

மட்டு தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் சம்பவதினமான திங்கட்கிழமை (17) அனுமதிபத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து பஸ்களை தடுக்குமாறு எதிர்ப்பு தெரிவித்து தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர்கள் மற்றும் நடத்துனர்கள் மற்றும் சாரதிகள் நடத்திய ஆர்ப்பாட்டதில் சாணக்கியன் எம்.பி கலந்து கொண்டார்.

அதன்போது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சாணக்கின் எம்பி, இந்த போக்குவரத்து அனுமதியில் ஊழல் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் பின்னணியில் அரசியல்கட்சி ஒன்று இருப்பதாக தெரிவித்தார்.

அந்த குற்றச்சாட்டிற்கு இருவர் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அங்கு பெரும் சர்ச்சை ஏற்பட்டதுடன், அந்த இருவரையும் ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்து வெளியேற்றியதுடைன் அவர்களை துரத்தி துரத்தி அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இதில் சாரதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் தாக்குதலுக்கு உள்ளான இருவரும் செய்த முறைப்பாட்டிற்கமைய அவர்களை தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய 3 பேரை செவ்வாய்க்கிழமை (18) கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அடையாளம் காணப்பட்ட ஏனைவர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அடையாள அணிவகுப்புக்கு உடபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நியமிக்காமல் தாமதிப்பது சதியின் ஒரு பகுதியே

ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவகம் மற்றும் பெப்ரல் ஆகியவையே குற்றம் சுமத்தியுள்ளன.

தேவைக்கேற்ப ஐந்து உறுப்பினர்களை ஆணைக்குழுவுக்கு நியமிப்பதை விட மூவரில் இருவரிடமிருந்து அனுமதியைப் பெற்று தேர்தல் தொடர்பான முக்கியமான முடிவுகளை எட்டுவது இலகுவானது என்று ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவகம் தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பு பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் இவ்வாறானதொரு சதி இடம்பெறுவது கவலையளிக்கின்றது எனவும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் பின்னணியில் இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என பெப்ரல் தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பது அரசியலமைப்பு பேரவையின் பொறுப்பாகும் எனவும் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுவதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சஜித்துடன் கைகோர்க்க இவையே காரணங்கள்

பிரதான பங்காளி கட்சியாக அங்கம் வகிக்க பிரதான காரணங்களில் இதுவும் ஒன்று என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்தார்.

இந்த விடயங்களை பகிரங்கமாக மேடைகளில் கூறியுள்ள அவர் பாராளுமன்றத்தில் அதை இன்று (நேற்று) மீண்டும் கூறி உறுதி செய்தார் என்று மனோ எம்.பி தெரிவித்தார்.

அதேபோல், கொழும்பு மாநகரில் சொந்த வீடு இல்லாமல் வாடகை வீடுகளில் வாழும் மக்களுக்கு தொடர்மனைகளை கட்டி சொந்தவீடுகள் வழங்கவும் சஜித் பிரேமதாச எம்முடன் ஒரு கட்சியாக, தேசிய கூட்டணியாக உடன்பாடு கண்டுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி, சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் கூட்டணியில், பிரதான பங்காளி கட்சியாக அங்கம் வகிக்க பிரதான காரணங்களில் இது ஒன்றாகும், எதிர்கட்சி தலைவர் பிரேமதாச, இவை தொடர்பில் எமக்கு எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் உறுதிகள் அளித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் எதிர்கட்சி தலைவர் பிரேமதாசவின் உரை தொடர்பில் மேலும் தெரிவித்த மனோ எம்.பி,

“மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென், வயம்ப ஆகிய 6 மாகாணங்களின், பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு (அவிசாவளை), களுத்துறை, குருநாகலை, காலி, மாத்தறை ஆகிய 12 மாவட்டங்களில் அமைந்துள்ள 102 பிரதேச செயலக பிரிவுகளில் பெருந்தோட்ட துறை அமைந்துள்ளது.

எங்கெல்லாம் எம்மவர் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் காணி உரிமையும், வீட்டு உரிமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதேபோல், தொழில், பொருளாதாரம், வாழ்வாதாரம் ஆகிய காரணங்களை தேடி பெருந்தொகையான நமது மக்கள் மலைநாட்டு பிரதேசங்களில் இருந்தும், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இருந்தும் தேசிய தலைநகரம் கொழும்பு மாநகரில் வந்தும் குடியேறுகிறார்கள். இங்கேயே பிறந்து வளர்ந்து வாழும் மக்களும் இருக்கின்றார்கள். அனைவருக்கும் கல்வி, வீடு, வாழ்வாதார உரிமைகளை உறுதி செய்து, பாதுகாப்பு அளிக்க நான் இங்கே இருக்கிறேன்.

## வேற்றுக்கிரக வாசிகளிடம் தமிழர் பிரச்சினை செல்லலாம்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (19) நடைபெற்ற பலஸ்தீன விவகாரம் தொடர்பான விவாதம் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், “மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கின்ற சர்வதேச ரீதியான அமைப்புக்கள் எவையும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலியத் தாக்குதல்களுக்கு எதிராக எந்தவிதமான கருத்துக்களும் தெரிவிக்காமல் இருந்து வருவதாகக் விமர்சனங்கள் எழுந்து வருகின்ற நிலையில், எமது தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது என்றார்.

## தொடர்ந்து சரியும் இலங்கை ரூபாய்

செவ்வாய்க்கிழமை (18) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதத்தின்படிஎடொலரொன்றின் கொள்வனவு விலை 314 ரூபாய் 95 சதமாகவும் விற்பனை விலை 328 ரூபா 65 சதமாகவும் பதிவாகியது.

கடந்த வெள்ளிக்கிழமை (14) இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதத்துக்கு அமைய, டொலரொன்றின் கொள்வனவு விலை 310 ரூபாய் 49 சதமாகவும், விற்பனை விலை 324 ரூபாய் 67 சதமாகவும் பதிவாகியிருந்தது

இலங்கை ரூபாய்க்கு நிகரான ஐக்கிய அமெரிக்க டொலரொன்றின் கொள்வனவு விலை கடந்த 2022 ஏப்ரல் மாதத்தில் 300 ரூபாயை விட குறைவடைந்திருந்தது

## அரச அதிகாரிகளின் பங்களிப்பு அவசியம்

குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றத்துக்காக எடுக்கப்பட வேண்டிய கொள்கை ரீதியிலான தீர்மானங்கள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த கொள்கைத் தீர்மானங்களை உரிய முறையில் எடுக்கத் தவறியதன் காரணமாகவே இந்நாடு, கடந்த காலங்களில் பல பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

“அஸ்வெசும” சமூக நலத்திட்டத்துக்கு அரச அதிகாரிகளின் பங்களிப்பு தொடர்பில் செவ்வாய்க்கிழமை (18) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“அஸ்வெசும” சமூக நலன்புரி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் இதுவரையான முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், சிறுநீரக நோயாளிகள், அங்கவீனர்கள் மற்றும் முதியோர் கொடுப்பனவுகளுக்காக பதிவு செய்யப்பட்ட அனைவருக்கும் அந்தக் கொடுப்பனவுகளை வழங்குமாறு சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக இதுவரை அமுல்படுத்தப்பட்டு வந்த சமுர்த்தி அபிவிருத்தித் திட்டத்துக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட “அஸ்வெசும” சமூக நலத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக பயனாளிகளை இனங்கண்டுகொள்ளும் செயல்முறையை ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கிய அவர், இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கேட்டுக்கொண்டார்.

இந்த வேலைத்திட்டத்தில் இருந்து தற்போது ஒதுங்கியுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொண்டு “அஸ்வெசும” திட்டத்திற்காக இதுவரை கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைத் தீர்த்து, தகுதியானவர்களை அடையாளம் காணும் பணியை துரிதப்படுத்துவது குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## மன்னார் முதல் மாத்தளை வரை நடைபயணம்

ஜூலை 29ஆம் திகதி மன்னாரில் ஆரம்பிக்கும் இந்த பயணம் ஓகஸ்ட் 12ஆம் திகதி மாத்தளையில் நிறைவு பெறவுள்ளது.

மலையக பெருந்தோட்டங்களில் தொழில்புரிவதற்காக தென்னிந்தியாவில் இருந்து மலையக மக்கள் அழைத்து வரப்பட்டு 200 வருங்கள் பூர்த்தியாகியுள்ளது. மன்னாரில் தரையிறங்கிய மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்து மாத்தளை வரை கால்நடையாக ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர்.

மாண்புமிகு மலையகத்திற்கான கூட்டிணைவு, தேசிய கிறிஸ்தவ பேரவை, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மலையக சமூகத்துடன் பணிபுரியும் தனிநபர்கள் அடங்கிய ஒரு குழுவினரால், இந்த நடைபவனியானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலையக தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடைபவனி மற்றும் அதனுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடல்களில் பங்கேற்குமாறு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தில் புதன்கிழமை (19) முற்பகல் இடம்பெற்றது.

இதன்போது, கருத்து தெரிவித்த பிரதிநிதிகள், “இந்தியாவில் இருந்து தமிழர்கள் இலங்கைக்கு தோட்டங்களில் வேலை செய்வதற்காக அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகின்றன. அன்றிலிருந்து இச் சமூகம் நாட்டுக்கு அனைத்துத் துறைகளிலும், குறிப்பாக பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பை அளித்துள்ளது.

இலங்கையில் மலையக மக்களின் இருப்பு தொடர்ச்சியான போராட்டமாகவே இருந்து வருகிறது.

#மலையகம்200 இன் ஒட்டுமொத்த கருப்பொருளுக்கு இணங்க, தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையிலான நடைப்பயணத்தை நாங்கள் ஒழுங்குபடுத்தி - இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் முதன்முதலில் கொண்டு வரப்பட்டு, காடுகளின் ஊடாக கோப்பி தோட்டங்களுக்கு சென்றபோது அவர்கள் சென்ற பாதையை மீட்டுப் பார்க்கவிருக்கிறோம்.

நடைப்பயணத்தின் நோக்கம் பிரதிபலிப்பு மற்றும் இணைப்பாகும். இது எதிர்காலத்தைப் பற்றியது. மலையக சமூகம் இலங்கையின் முழுமையான மற்றும் சமமான குடிமக்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பற்றி, நமது வரலாறு, போராட்டங்கள் மற்றும் அபிலாஷைகள் பற்றி மற்ற சமூகத்தினருடன் உரையாடுவதற்கான வாய்ப்பாகவும் இந்த நாடு முழுவதுமான நடைபயணம் மேற்கொள்ளப்படுகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள், ‘மாண்புமிகு மலையக மக்கள்’ என்ற தொனிபொருளின் கீழ் 15 நாட்களில் 252 கிலோமீற்றர்கள் தூரம் நடக்கத் திட்டமிட்டுள்ளனர். வழியில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன” என்றனர்.

## வட மாகாண மக்களை நாம் வெறுப்பதில்லை

மட்டக்களப்பில் திங்கட்கிழமை (17) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தை வரையறுத்தவர்கள் இவர்களது மூதாதையர்கள் போல் பேசுகின்றனர்.

தங்களது இருப்புக்காகவும், கட்சிக்காகவும், மட்டுமே பேசினார்களே தவிர எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி உண்மையாக நேசிக்கும் மக்கள் நலன் சார்ந்த அந்த மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கருத்தில் கொள்ளாது திட்டமிடப்படாத செயற்பாடுகளே இவர்களின் நடவடிக்கையாகும்.

கிழக்கு மாகாண மக்களின் சவால்களை எதிர்கொள்ள படித்த சமூகத்தின் செயற்பாடு எவ்வளவு முக்கியம் என நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள எங்களது மக்களது வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பும் சிந்தனைகளை பாரம்பரிய பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட இந்த மண்ணிலே உற்பத்தி துறையை கட்டி எழுப்ப வேண்டியதே முக முக்கியமான வேலையாகும்.

உற்பத்தி செய்யக்கூடிய ஏற்றுமதி பயிர்களையே நாம் பயிரிட வேண்டிய தேவை உள்ளது

## நியமனம்





■ ரீ.எல்.ஜவ்பர்கான்

கிழக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் அம்பாறை மாவட்டத்துக்கான பிரதிப் பணிப்பாளராக கால்நடை வைத்தியர் டாக்டர் எஸ். டி. எம். மாஹிர் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பிரதிப் பணிப்பாளராக கால்நடை வைத்தியர் டாக்டர் அப்துல் ஹாதி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விரு பிரதிப் பனிப்பாளர்களும் தத்தமது மாவட்டங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை(24) தமது கடமைகளை பொறுப்பேற்க உள்ளனர்.



## முதலாவது அறுவடை

■ எம் எஸ் எம் நூர்தீன்

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய உணவு பாதுகாப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள், காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதரவினால் செவ்வாய்க்கிழமை (18) அறுவடை செய்யப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் மூலம் மரக்கறி விதைகள் வழங்கப்பட்டன.

இந்த வகையில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் புதிய காத்தான்குடி கிழக்கு அன்வர் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் மூலம் ஹிதாயத்தும்மா எனும் பயனாளியின் இல்லத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள் இதன் போது அறுவடை செய்யப்பட்டன.



## பள்ளிவாசல் அறைகள் உடைத்து திருட்டு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

திருகோணமலை டைக் வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றில் அறைகளை உடைத்து அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்ட சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை (13) இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்கள் தங்கி இருந்த மூன்று அறைகளை உடைத்து அங்கிருந்த ஆடைகள், ஒரு தொகை பணம், தலைக்கவசங்கள் உட்பட பல பொருட்களை சிறுவன் ஒருவனுடன் சேர்ந்து நபரொருவர் திருடிச் செல்லும் காட்சி அங்கு பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளது.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், திருடர்களை கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வாகனத் தரிப்பிடத்தில் பாரிய தீ

# 30 மோட்டர் சைக்கிள்கள் எரிந்து சாம்பல்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் தனியார் வாகனதரிப்பிடத்தில் தீ ஏற்பட்டதில் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த 30 மோட்டர் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகள் தீயில் எரிந்து முற்றாக சேதமடைந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை(18) மாலை இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டக்களப்பு,வாகரை போன்ற பிரதேசங்களுக்கு வேலை மற்றும் வைத்தியசாலை உட்பட பல தேவைகளுக்காக தமது வீடுகளில் இருந்து பிரதான வீதியிலுள்ள வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள பஸ்தரிப்பு நிலையத்திற்கு மோட்டர்சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் பிரயாணித்து, அதனை அந்த பகுதியிலுள்ள தனியார் வாகன தரிப்பிடத்தில் நிறுத்திவிட்டு தமது பிரயாணத்தை மேற்கொண்டுவருவது வழமை.



இந்த நிலையில், சம்பவதினமான காலையில் வாகன தரிப்பிடத்தில் தமது மோட்டார் சைக்கிள் மற்றம் துவிச்சக்கரவண்டிகளை வழமைபோல நிறுத்திவிட்டு செல்வர். வாகனதரிப்பிட காவலர் அன்று மாலையில் அங்கிருந்த குப்பைகளை கூட்டி தீவைத்துள்ளார்.

அந்தத் தீ திடீரென அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் பரவியதையடுத்து தீப்பற்றி எரிய தொடங்கியது. இதில், வாகன தரிப்பிட கொட்டகை, 30 மோட்டர் சைக்கிள்கள் 27 துவிச்சக்கரவண்டிகள் உட்பட அனைத்தும் முற்றாக எரிந்து சாம்பலாகியது.

அந்தப் பகுதியில் இருந்த பொதுமக்கள், பொலிஸார் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தனர் என்பதுடன் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## கோழி தீவன மூடைகள் 3 திருட்டு: இருவர் கைது

■ நவி

கம்பளை வெலம்பொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோணாடிக்க பிரதேச பகுதியில் கோழி பண்ணை ஒன்றில் சுமார் 54 ஆயிரம் பெறுமதியான கோழி தீவன மூடைகள் மூன்றை திருடிச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது,

கோழி பண்ணை உரிமையாளர் வெலம்பொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது கோணாடிக்க பிரதேசத்தை சேர்ந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

தீவன மூடைகள் மூன்றும் கடுகண்ணாவ பகுதியில் உள்ள வியாபார நிலையத்துக்கு விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரு சந்தேக நபர்களையும் கம்பளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்க்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி

## ஆலய கொடியேற்றம்

சாவகச்சேரி மட்டுவில் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் மகோற்சவப் பெருவிழா வெள்ளிக்கிழமை (21) காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் மகோற்சவம் இடம்பெறவுள்ளது.

மகோற்சவ பெருவிழாவில் வேட்டைத்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கும் சப்பறத்திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கும் தேர்த்திருவிழா 31 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் தீர்த்தத் திருவிழா செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் கொடியிறக்கம் மாலை 6 மணிக்கும் பூங்காவனம் திருக்கல்யாணம் புதன்கிழமை மாலை 6 மணிக்கும் பிராயச்சித்தம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் வைரவர் சாந்தி மாலை 5 மணிக்கும் நடைபெறவுள்ளன. மகோற்சவ குரு சிவஸ்ரீ முத்து பாஸ்கரரவிக்குருக்கள் தலைமையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிதம்பர தியாகராஜக்குருக்கள் ,ஆலய குரு பிரம்மஸ்ரீ பா. வேதாரணியசர்மா ஆகியோர் கிரியைகளை நடத்தி வைப்பர் உற்சவகாலங்களில் தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

## தாய்க்கு சமமான அன்பை கொடுக்கும் அடுத்த உறவு முன்பள்ளி ஆசிரியை

அன்னையின் அரவணைப்பில் வளரும் ஒரு பிள்ளை, தனது கல்விப் பயணத்தில் காலடி எடுத்து வைக்கும் போது தாய்க்கு சமமான அன்பை பெறும் அடுத்த உறவாக முன்பள்ளி ஆசிரியையே காணப்படுகின்றார் என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அ.அரவிந்குமார் தெரிவித்தார்.

பிள்ளையின் வளர்ச்சியில் தாய்க்கு நிகரான சுமையை முன்பள்ளி ஆசிரியர் சுமக்கின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வேளையில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்;

பாடசாலை கல்வியை ஆரம்பிக்கயிருக்கும் பிள்ளைகளுக்கு தேவையான முன் அனுபவத்தை பெற்றுத் தரும் நிலையங்களாக முன்பள்ளிகள் இருந்து வருகின்றன. இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள் ஆற்றும் சேவைக்குரிய நிரந்தர சம்பளம் கிடைப்பதில்லை. அதிகமான முன்பள்ளி ஆசிரியர்கள் சிறந்த கல்வித் தகைமைகளை கொண்டிருந்தாலும் குடும்ப சூழ்நிலை, வாழ்வாதாரம் என்பவற்றை கருத்திற் கொண்டு இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமூகத்தில் ஒரு ஆசிரியருக்குரிய அங்கிகாரம் இவர்களுக்கு கிடைக்கின்றது. எனினும் இவர்களுடைய பொருளாதாரம் ஆரோக்கியமானதாக இல்லை என்றார்.

மலையகத்தில் உள்ள அதிகமான பெற்றோர் தொழிலாளர்களாக உள்ளனர். இவர்களின் வேலை நேரம் எட்டு மணித்தியாலங்களாக உள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் அவர்களின் பிள்ளைகளை பாதுகாப்பாக பராமரித்து, எதிர்காலத்திற்கு வழிகாட்டும் பொறுப்பை முன்பள்ளி ஆசிரியர்கள் செய்து வருகின்றனர் என்றார்.

அவர்களின் பணிக்கு ஊக்கமளிக்கும் வகையில் 116 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 2ஆயிரம் ரூபாய் அவர்களது வங்கி கணக்கில் வைப்பில் இடப்படவுள்ளது. இன்றைய நிலைமையில் இது அவர்களது பொருளாதாரத்திற்கு எவ்வாறு வலு சேர்க்கும் என்பது கேள்விக் குறியே, எனினும் அவர்களின் பணியை தொடர்ந்து சிறப்பாக முன்னெடுக்க ஒரு உந்து சக்தியாக இது அமையும் என நம்புகிறேன் என்றார்.

அவுஸ்திரேலியாவில் இருக்கும் எனது புதல்வன் பிரவின், சுவிஸ் நாட்டில் இயங்கும் தியாகி அறக்கொடை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு மாதாந்தம் இந்நிதி உதவியை வழங்கும் முயற்சிக்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் என்றார்.

## இருவரிடம் ரூ.28 இலட்சம் மோசடி: இரு போலி முகவர்கள் கைது

கனடா, ஓமான் நாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து இருவரிடம் 28 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டு மோசடியில் ஈடுபட்ட கொழும்பு மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த இரு போலி முகவர்களை திங்கட்கிழமை (17) கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு விசேட குற்ற புலனாய்வு விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

கனடாவிற்கு அனுப்புவதாக கொழும்பிலுள்ள போலி முகவர் ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரிடம் 15 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டு அவரை 6 மாதகாலமாக ஏமாற்றி மோசடி செய்துள்ளார். இந்நிலையில் அந்த போலி முகவருக்கு எதிராக விசேட குற்ற விசாரணை பிரிவில் முறைப்பாடு செய்ததையடுத்து போலி முகவரை கொழும்பில் வைத்து கைது செய்தனர்.

அதேவேளை ஓமானில் வேலை தருவதாக ஒருவரிடம் சின்ன ஊறணியைச் சேர்ந்த போலி முகவர் ஒருவர் 13 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டு ஏமாற்றி வந்த நிலையில் பாதிக்கப்பட்டவர் செய்த முறைப்பாட்டிற்கு அமைய போலி முகவரை கைது செய்தனர்.

## நாவாந்துறை மோதல்: இருவர் கைது

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் இருவர் செவ்வாய்க்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) மாலை இடம்பெற்ற கால்பந்தாட்ட போட்டியின் போது கிராமத்தை சேர்ந்த இரு குழுவினருக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

அதன் தொடர்ச்சியாக திங்கட்கிழமை (17) இரவு இரு குழுவினரும் மோதலில் ஈடுபட்டனர். அதன் போது,வீதிகளில் கண்ணாடி போத்தல்களை உடைத்தும் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டு , நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அதேவேளை தாக்குதலில் காயமடைந்த நான்கு பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு: பெண் காயம்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி பகுதியில் உள்ள வீடொன்றின் மீது செவ்வாய்க்கிழமை (18) இரவு 09: 30 மணியளவில் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தி, வீட்டில் இருந்த குடும்ப பெண் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பெண் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு , மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முகங்களை கறுப்பு துணியால் மூடி கட்டியவாறு , இரு மோட்டார் சைக்கிளில் வந்த 06 பேர் கொண்ட கும்பல், ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி , வீட்டினுள் சென்று, அங்கிருந்த பொருட்களையும் அடித்து நொறுக்கி பெற்றோல் குண்டு வீசியுள்ளது.

அப்போது , வீட்டில் இருந்த மூன்று பிள்ளைகளின் தாயான 42 வயதான பெண்ணொரு வரையும் சரமாரியாக தாக்கி விட்டு,அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

சத்தம் கேட்டு விரைந்த அயலவர்கள் காயமடைந்த பெண்ணை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் அச்சுவேலி பொலிஸாருக்கும் அறிவித்தனர்.

அதனைஅடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# ஆறாத வடுக்களும் கோழைத்தனமான தேடலும்

தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதன் பின்னர் திடீரென மரணமடைவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இதனால், நாட்டின் சுகாதாரத் துறையின் மீதான நம்பிக்கை மக்களிடத்தில் இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றது. இதற்கிடையே, இந்தப் பிரச்சினைக்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, வைத்தியசாலைக்கு வரும் அனைவரையும் காப்பாற்ற முடியாது என்கிறார்.

பிறப்பு இருக்குமானால் இறப்பு இருக்கும் இது நியதி, எனினும், மருத்துவத்துறையின் கவனயீனம் காரணமாக அநியாயமான உயிரிழப்புகள் இடம்பெறுகின்றன. இதில், பிரதானமானவை காலவதியான மருந்துக்களை பயன்படுத்துவதாகும். இதனால், பச்சிளம் குழந்தைகள் கூட மரணமடைகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் விசாரணைக் குழுக்களை அமைத்து, அந்த அறிக்கை கிடைப்பதற்குள் இன்னும் எத்தனை உயிர்கள் பலியாகப் போகின்றன என்பதற்கெல்லாம் எம்மால் பதில்சொல்ல முடியாது. காலங்கடந்த அறிக்கையால், பிரிந்த உயிர் திரும்பி கிடைக்கப்போவதில்லை. எனினும், அவ்வறிக்கையின் பரிந்துரைகள் எதிர்காலத்துக்கு முக்கியம்.

நமது நாட்டை மட்டுமன்றி, உலக பெருந்தொற்றாக பரவிய கொரோனாவால் தற்போதும் பாதிக்கப்படுவோர் இருக்கத்தான் செய்கின்றனர். இலங்கையில், இதுவரையிலும் 671,756 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலிருந்து 654,910 பேர் மீண்டுள்ளனர். 38 பேர் தற்சமயம் பாதிக்கப்பட்டுள்ளனர். நாளொன்றுக்கு நான்கு புதிய தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். 18,808 பேர் கொரோனாவால் மரணித்துள்ளனர் என சுகாதார மேம்பாட்டு பணியக புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

இதில், கொரோனாவினால் பாதிக்கப்பட்டு இறந்த முஸ்லிம்களின் ஜனாசாக்களை எரியூட்டியதன் ஊடாக, அவர்களின் மனங்களின் கடந்த அரசாங்கம் காயங்களை ஏற்படுத்தியது. அக்காயங்கள் வடுவாகவே இருக்கின்றன. பச்சிளம் குழந்தையைக்கூட சுடர்விட்டு எறிந்த தீயில் போட்டு கருக்கிவிட்டனர். அந்த சமூகத்தின் கடுமையான போராட்டத்தின் காரணமாக, பல மாதங்கள் கடந்தே புதைப்பதற்கான அனுமதி கிடைத்தது.

உலகளாவிய ரீதியில் பார்த்தோமெனில் கொரோனா தொற்றால் இறந்தவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டன. இங்குமட்டும் தான் எரியூட்டப்பட்டன. பல்லின, பல மத மற்றும் பல கலாசாரங்களை பின்பற்றி வாழுவோர் இருக்கும் இந்நாட்டில், அவர்களின் எந்தவோர் உரிமையையும் மதிக்காத வகையிலேயே கடந்த அரசாங்கம் செயற்பட்டது.

இதனால், உலக நாடுகளின் பலவற்றின் உதவிகளையும் இழந்துகொண்டது. எனினும், பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆறுதல் கூறும் வகையில் அல்லாமல், இன்னுமின்னும் மதவேதனைகளை அதிகரிக்கும் வகையிலேயே அரசாங்கம் பதிலளித்துக் கொண்டிருக்கின்றது.

கொரோனா தொற்றினால் மரணமடைந்த முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பதற்கு பிழையான தீர்மானம் மேற்கொண்ட கொரோனா குழு அதிகாரிகளுக்கு எதிராக அமைச்சரவை மட்டத்தில் விசாரணை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உறுதியளித்தார்.

அன்றைய அமைச்சரவையிலும் அவர் இருந்தார். அதிகாரிகளின் தீர்மானங்கள் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டிருக்கும். இதனிடையே மீண்டும் விசாரணை செய்வது பூசிமெழுகும் செயற்பாடு என்பதுடன் ஆறாத வடுக்களுக்கான கோழைத்தனமான தேடலாகும் என்பதே எமது அவதானிப்பு.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர். ஷ

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்டப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்புக் கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள்.

ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்கு புத்தி உண்டு; சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்கு பிரதானமானது..

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மிகவும் ஆபத்தான நிலையில் திருவையாறு வில்சன் வீதி பாலம்



கிளிநொச்சி, திருவையாறு வில்சன் வீதியில் மூன்றாம் பகுதியில் உள்ள சரவனாஸ் பாலத்தின் அத்திபாரம் இடிந்து வீழ்ந்த நிலையில், ஆபத்தானதாகக் காணப்படுகிறது.

இரணைமடு குளத்தின் இடது கரை பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில், திருவையாறு வில்சன் வீதியையும் மூன்றாம் பகுதியையும் இணைக்கும் பாலமே இவ்வாறு இடிந்து விழும் நிலையில் தற்போது காணப்படுகிறது.

விவசாய கிராமமான திருவையாறு பிரதேசத்தில் இருந்து, ஏனைய பகுதிகளிக்கு உழவு இயந்திரங்கள், ஏனைய வாகனங்கள் தினமும் தங்களுடைய நாளாந்த நடவடிக்கைகளுக்காக தற்போதும் குறித்த பாலத்தையே பயன்படுத்தி வருகின்றன. ஆனால், குறித்த பாலம் எவ்வேளையிலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

குறித்த பாலம், இரணைமடு குள புனரமைப்பின் ஒரு பகுதியான 'இபாட்' திட்டத்தின் கீழ் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் புனரமைப்பு செய்யப்பட்டது. ஆனால், புனரமைப்பின் போது மேலோட்டமாக பூசி மெழுகி புனரமைப்பு பணிகளை நிறைவு செய்துவிட்டனர் என்றும் பிரதேச பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த பாலத்தின் ஆபத்தின் விபரீதத்தை புரிந்துகொண்டு, உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் அவசர கோரிக்கையை விடுத்துள்ளனர்.

மு. தமிழ்ச்செல்வன்

சீனாவின் தாமதமான கடன் மறுசீரமைப்பு

# இலங்கையை ஆபத்தில் ஆழ்த்தும்

உலக விவகாரங்களில் சீனாவின் செல்வாக்கு கடந்த சில தசாப்தங்களாக கணிசமாக வளர்ந்துள்ளது, அதன் பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி (பிஆர்ஐ) உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

எவ்வாறாயினும், பெருகிவரும் கடன் கடப்பாடுகளுடன் இலங்கை சிக்கியுள்ள நிலையில், கடன் மறுசீரமைப்பை விரைவுபடுத்துவதில் சீனாவின் தயக்கம், நாட்டின் எதிர்காலத்தை ஆபத்தில் ஆழ்த்துகிறது என்பது தெளிவாகியுள்ளது.

சீனாவின் செயலற்ற தன்மை இலங்கையை அதன் ஏழ்மையான குடிமக்களின் சேமிப்புகளான ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) மற்றும் ஊழியர்களின் நம்பிக்கை நிதியம் (ETF) மற்றும் நாட்டின் சாத்தியமான விளைவுகளை எவ்வாறு பயன்படுத்தத் தூண்டுகிறது பொருளாதார ஸ்திரத்தன்மை போன்றவற்றில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

> **இலங்கை தனது பொருளாதார பங்காளித்துவங்களை பன்முகப்படுத்த வேண்டும் மற்றும் அதன் உள்நாட்டு நிதி அமைப்புகளை பலப்படுத்த வேண்டும்**

### இலங்கையின் கடன் நெருக்கடியில் சீனாவின் பங்கு

இலங்கையின் கடன் நெருக்கடியானது அதன் இலட்சிய உள்கட்டமைப்புத் திட்டங்களில் இருந்து அறியலாம், அவற்றில் பல சீனக் கடன்களால் நிதியளிக்கப்பட்டன. இந்தத் திட்டங்கள் ஆரம்பத்தில் நம்பிக்கைக்குரியதாகத் தோன்றினாலும், தற்போது இலங்கைப் பொருளாதாரத்திற்கு சுமையாக மாறியுள்ளது. இதன் விளைவாக, நாடு அதன் சீன கடன் வழங்குநர்களிடமிருந்து கடன் மறுசீரமைப்பு மற்றும் நிவாரணத்தை நாடியுள்ளது. எவ்வாறாயினும், சீனாவின் பதில் மெதுவாகவும் போதுமானதாகவும் இல்லை, இலங்கைக்கு வரையறுக்கப்பட்ட விருப்பங்கள் உள்ளன.

### ஏழை மக்களின் சேமிப்பில் தோண்டுதல்

அதன் கடன் கடமைகளை நிறைவேற்ற, இலங்கை தனது குடிமக்களின் சேமிப்புகளை, குறிப்பாக EPF மற்றும் ETF ஐ நம்பியிருப்பவர்களின் சேமிப்புகளைத் தட்டிக் கேட்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இந்த நிதிகள் ஊழியர்களுக்கு நிதி பாதுகாப்பு வலையை வழங்குவதற்காக நிறுவப்பட்டது, அவர்களுக்கு நிலையான எதிர்காலத்தைப் பாதுகாக்க உதவுகிறது. எவ்வாறாயினும், அரசாங்கம் இந்த சேமிப்பில் மூழ்கியுள்ள நிலையில், ஆயிரக்கணக்கான இலங்கையர்களின் எதிர்காலம் இப்போது நிச்சயமற்றதாக உள்ளது.

### பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான தாக்கங்கள்

EPF மற்றும் ETF ஐ குறைப்பதன் மூலம், இலங்கை தனது குடிமக்களின் நிதி பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார ஸ்திரத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத உள்நாட்டு முதலீடு மற்றும் நுகர்வு தூண்டுவதில் இந்த நிதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறைக்கப்பட்ட சேமிப்புடன், இலங்கையர்களுக்கு செலவழிக்கக்கூடிய வருமானம் குறைவாக இருக்கும், இதனால் செலவுகள் குறைக்கப்பட்டு பொருளாதார நடவடிக்கைகளில் மந்தநிலை ஏற்படும்.

### சீனாவின் தாமதமான கடன் மறுசீரமைப்பு

விரைவான கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு சீனா தயக்கம் காட்டுவது இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை மேலும் மோசமாக்கியுள்ளது. பரஸ்பர நன்மை பயக்கும் உடன்படிக்கையை எட்டுவதில் முன்னேற்றம் இல்லாததால், இலங்கை தனது கடன் கடமைகளை நிறைவேற்றுவதில் சிரமப்பட்டு, இறுதியில் அதன் குடிமக்களை பாதிக்கும் கடினமான தேர்வுகளை செய்ய அரசாங்கத்தை கட்டாயப்படுத்தியுள்ளது.

> **இது சீனாவின் செல்வாக்குடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைப்பது மட்டுமல்லாமல், பேச்சுவார்த்தை ஆற்றலையும் வழங்கும்**

இதற்கிடையில், சீனாவின் பொருளாதாரச் செல்வாக்கு பேச்சுவார்த்தைகளின் விதிமுறைகளை ஆணையிட அனுமதிக்கிறது, இதனால் இலங்கை பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளது.

### வெளிப்படையான பேச்சுவார்த்தைகளின் தேவை

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண, இலங்கையுடன் வெளிப்படையான மற்றும் நியாயமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது சீனாவின் கட்டாயமாகும். நாட்டின் மக்கள் மீது தேவையற்ற சுமையை ஏற்படுத்தாத யதார்த்தமான கடன் மறுசீரமைப்பு விருப்பங்களைப் பற்றி விவாதிப்பது இதில் அடங்கும். வெளிப்படையான பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்கு இடையே நம்பிக்கையை வளர்க்கவும், எதிர்கால ஒத்துழைப்புகளுக்கு முன்னோடியாகவும் அமையும்.

### மாற்று மற்றும் பல்வகைப்படுத்தல் தேடுதல்

இலங்கையும் மாற்று நிதி ஆதாரங்களை ஆராய வேண்டும் மற்றும் சீனாவை நம்பியிருப்பதை குறைக்க அதன் பொருளாதார பங்காளித்துவத்தை பன்முகப்படுத்த வேண்டும். மற்ற நாடுகளுடனும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் ஈடுபடுவதன் மூலம், இலங்கையானது மிகவும் சாதகமான நிபந்தனைகளை பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் அதன் கடன் இலாகாவை பன்முகப்படுத்த முடியும். இது சீனாவின் செல்வாக்குடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைப்பது மட்டுமல்லாமல், நாட்டிற்கு அதிக பேச்சுவார்த்தை ஆற்றலையும் வழங்கும்.

### உள்நாட்டு நிதி அமைப்புகளை வலுப்படுத்துதல்

வெளிப்புற தீர்வுகளைத் தேடுவதற்கு மேலதிகமாக, இலங்கை தனது உள்நாட்டு நிதி அமைப்புகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். நிதிகளின் தவறான நிர்வாகத்தைத் தடுக்கவும், EPF மற்றும் ETF இன் நீண்டகால நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தவும் பயனுள்ள ஒழுங்குமுறைகள் மற்றும் மேற்பார்வை வழிமுறைகளை செயல்படுத்துவது இதில் அடங்கும். வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதன் மூலம், இலங்கை தனது நிதி நிறுவனங்களின் மீதான பொது நம்பிக்கையை மீட்டெடுக்க முடியும் மற்றும் அதன் குடிமக்களின் சேமிப்பைப் பாதுகாக்க முடியும்.

> **கடன் கடமைகளை நிறைவேற்றுவதில் சிரமப்பட்டு, அதன் குடிமக்களை பாதிக்கும் கடினமான தேர்வுகளை செய்ய அரசாங்கத்தை கட்டாயப்படுத்தியுள்ளது**

முடிவில், சீனாவின் தாமதமான கடன் மறுசீரமைப்பு இலங்கையை ஓர் ஆபத்தான நிலைக்கு தள்ளியுள்ளது, அரசாங்கம் அதன் வறிய குடிமக்களின் சேமிப்பை தட்டிக்கழித்து அவர்களின் எதிர்காலத்தை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது. சீனா தனது நடவடிக்கைகளின் தாக்கத்தை அங்கீகரிப்பதும், நிலையான தீர்வைக் காண வெளிப்படையான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதும் முக்கியமானது.

அதேசமயம், எதிர்கால நெருக்கடிகளுக்கு எதிராக பாதுகாப்பதற்காக இலங்கை தனது பொருளாதார பங்காளித்துவங்களை பன்முகப்படுத்த வேண்டும் மற்றும் அதன் உள்நாட்டு நிதி அமைப்புகளை பலப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், இலங்கை தனது கடன் நெருக்கடியை கடக்க முடியும் மற்றும் அதன் மக்களுக்கு பிரகாசமான எதிர்காலத்தை பாதுகாக்க முடியும்.

# கற்றல் சார் மன அழுத்தமும் மாணவர்களும்





தேவ அமலதாஸ் மரிஸ்ரெலா
உளவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனிதனின் ஆரோக்கியமான வாழ்விற்கு பெரும் சவாலை ஏற்படுத்தும் ஒரு விடயமாக மன அழுத்தம் காணப்படுகின்றது. அன்றாட வாழ்வில் “நாம் எந்தவிதமான பிரச்சனைகளையும் எதிர்கொள்ளவில்லை" எனக் கூறும் ஒரு நபரை கூட இந்த நவீன உலகில் காண முடியாது.

அனைவரும் ஏதாவது ஒரு பிரச்சனையை எதிர்கொண்ட வண்ணமே வாழ்ந்து வருகின்றனர்.1930 ஆம் ஆண்டுகளிலேயே மன அழுத்தம் எனும் சொற்பிரயோகம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் அண்மை காலங்களில் மிக அதிகமாக பிரயோகிக்கப்படும் சொல்லாக அது மாறியுள்ளது. ஒரு சூழலை அல்லது பிரச்சினையை உடல்உள ரீதியாக எதிர்கொள்ள முடியாத நிலையே மன அழுத்தம் ஆகும்.

*Auerbach & Grambling* 1998 இல், தனியனின் அன்றாட செயற்பாடுகளிலும், வாழ்வினை சமப்படுத்தி கொண்டு செல்வதற்கும் இடையூறாகவும், அச்சுறுத்தலாக உள்ளவற்றினை கூறலாம் என்கின்றனர்.

‘ஒரு சூழலினை சமாளிக்க அல்லது முகம் கொடுக்க முடியாத போது தனியனின் எழும் எதிர்மறையான மனவெழுச்சி அறிகை, நடத்தை, மற்றும் உடலியல் சார் செயற்பாட்டினை மன அழுத்தம் என *Bernstein, et.al* 2008 இல் குறிப்பிட்டு இருந்தார்.

ஒருவர் தனக்கு ஏற்படும் பிரச்சனையின் விளைவாக உடல் உள ரீதியில் பாதிப்புகளை எதிர்கொள்வாராயின் அவர் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளார் எனக் கொள்ளலாம். இதன் போது குறித்த பிரச்சனைக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் அவரது உள இயக்க நிலை எழுச்சி அடைந்து காணப்படும். *Hans selyle* என்பவர் உடலியல் உளவியல் தொழிற்பாட்டை பாதிக்கின்ற அச்சுறுத்துகின்ற நிகழ்வுகளுக்கு துலங்கும் செயல்முறை மன அழுத்தம் எனக் கூறுகின்றார். உயிரியல் ரீதியாக மன அழுத்தம் என்பதை அதிகம் பாவித்தார். அழுத்தம் ஏற்படும் போது உடல் உளம் என்பவை செயல் நிறுத்தத்தில் ஈடுபடும் எனவும் கூறினார் . மன அழுத்தத்தின்போது எமது உடல் அதிக துலங்களை காட்டுகின்றது. அழுத்தத்தின்போது ஏற்படும் உடலின் தொழில்பாடுகள் தொடர்பாக 1940 இல் *WB cannon* என்பவர் கூறுகையில் சாதாரண நிலையை விட அழுத்த நிலையின் போது எமது நரம்புத் தொகுதியின் தன்னாட்சி நரம்பு மண்டலம் அதிகம் தூண்டப்படுகின்றது. இதனால் உடலில் உள்ளுறுப்புகள் தொழிற்பாட்டை விரைவாக மேற்கொள்ளும் இதயத்துடிப்பு வேகமாக அதிகரித்தல் மற்றும் ரத்த அழுத்தம் கூடுதல் போன்றவற்றை குறிப்பிட முடியும். இதற்கு காரணம் நமது உடலை கட்டுப்படுத்தும் தன்னாட்சி நரம்பு தொகுதியாகும் இதில் காணப்படுகின்ற பரிவு நரம்புத் தொகுதி ஒருவர் அழுத்த நிலைக்கு உள்ளாகும் போது அதிகம் தூண்டப்படும். இதனால் கபச்சுரப்பி தூண்டப்பட்டு அதிரினல், நோர் அதிரினல் எனப்படும் இருவகையான சுரப்புக்கள் சுரக்கப்படும். இவை அழுத்தத்தை எதிர்கொள்ள உடலை தயார்படுத்தும் அதாவது உடலுக்கு தேவையான சக்தியைவழங்கும். இதனால் உடலின் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் மாற்றங்களை உருவாக்கும். பின்னர் அழுத்தத்தின் தீவிரம் குறைய ஆரம்பித்தவுடன் பரப்பரிவு நரம்புத் தொகுதியினால் உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் சாதாரண நிலைக்கு வரும் இவ்வாறான செயற்பாடுகளினால்தான் மனிதன் மன அழுத்தத்தை இலகுவாக எதிர் கொள்கின்றான்.

சிறுவர் முதல் பெரியவர் வரை இதன் தாக்கம் பரவிக்காணப்படுகின்றது. தொழில் சார்ந்த மன அழுத்தம், சூழல் சார்ந்த மன அழுத்தம், கற்றல் சார்ந்த மன அழுத்தம், என மன அழுத்த வகைப்பாடுகள் பல காணப்படுகின்றன.இவற்றுள் இன்றைய நவீன காலத்தில் மாணவர்களை அதிகளவு தாக்குகின்ற ஒன்றாக கற்றல் சார் மன அழுத்தம் காணப்படுகின்றது. இது கல்விப்புலத்தில் மாணவர்களுடைய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றாக திகழ்கின்றது. பாடசாலைகளிலும் சரி பல்கலைக்கழகங்களிலும் சரி இதை விட கல்வி நிலையங்களிலும் கூட கற்றல் சார் மன அழுத்தமானது மாணவர்களிடையே பல்வேறு ரீதியில் தாக்கத்தை செலுத்துவதாக காணப்பட்டு வருகின்றது. கல்விச் சூழலில் மன அழுத்தம் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் கற்றல் சார்மன அழுத்தத்தை ஏற்படுத்துவதுடன் கற்றல் செயல் திறனையும் பாதிப்படைய செய்கின்றது.

*Nayereh shahmohammadi* என்பவரால் 2011ல் தரம் 11 12 மாணவர்களை மையமாகக் கொண்டு அவர்களது கற்றல் சார் மன அழுத்தம் தொடர்பாக ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி பாடசாலை நேர அட்டவணை வீட்டு வேலைகள் பரீட்சைகள் பாடலைகள் போன்றவை அவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தமை கண்டறியப்பட்டது .

அந்த வகையில் மாணவர்களின் மன அழுத்தத்தை தூண்டுகின்ற காரணிகளாக கல்விச்சூழல் அதாவது பாடசாலை சூழல் ,வகுப்பறைச் சூழல், பல்கலைக்கழகச் சூழல், என்பன பொருத்தமானதாக காணப்படாத இடத்தில் அதன் விளைவாக மன அழுத்தம் ஏற்படுகின்றது. மேலும் உயர் கல்விக்காக சொந்த இடங்களை விட்டு வேறு இடங்களுக்கு செல்லும் மாணவர்களுக்கு இத்தகைய சூழல் மாற்றங்கள் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றுடன் பாடத்திட்டங்கள், பரீட்சைகள் ,தொடர்ச்சியான செயல்திட்டம் ,தொடர் நேர அட்டவணைகள் போன்றவையும் கற்றல் சார் மன அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடியன. ஆய்வுகளின் அடிப்படையில் பல மாணவர்கள் பரீட்சை காலத்தில் மன அழுத்த நிலைமைகளுக்கும் நெருக்கீடுகளுக்கும் முகம் கொடுப்பதாக கூறப்படுகின்றது. பாடங்களின் கடினத் தன்மை, பரீட்சை முடிவுகள், சக மாணவர் ஆசிரியர் பெற்றோரின் எதிர்பார்ப்புகள் ,எதிர்காலம் குறித்த அச்ச நிலைமை ,என்பவையும் கற்றல் சார் மன அழுத்தத்தை தூண்டுகின்றன. அத்தோடு ஆளிடைத் தொடர்புகள் காரணமாகவும் மாணவர்களுடைய கற்றல் சார் மன அழுத்தம் ஏற்படுகின்றது. வகுப்பினுள் நண்பர்கள் ஆசிரியர்கள் இடையேயான உறவுகள் சரியாக இல்லாதவிடத்தில் மற்றும் கல்விச் சூழலில் சக மாணவர்களால் கேலி செய்யப்படுதல், ஆசிரியர்களால் ஏனைய மாணவர்கள் முன்னிலையில் சுயமதிப்பு பாதிக்கும்படி நடாத்தப்படுதல் ,ஒதுக்கி வைக்கப்படுதல், போன்றவையும் மன அழுத்த நிலைமைக்கு தள்ளுகின்றது .

மாணவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துவதில் பெற்றோரும் ஒரு வகையில் காரணமாகின்றனர் .அதாவது தங்களுடைய பிள்ளைகளினுடைய விருப்பு வெறுப்புக்கள், திறன், இயலுமைகளுக்கு ஏற்ப கற்றல் செயல்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்காது தன்னுடைய கௌரவம், சமூக அந்தஸ்தினை நிலைநாட்டும் நோக்குடன் கல்வி நடவடிக்கைகளை பிள்ளையின் மேல் திணிக்கின்றனர். அத்தோடு பிள்ளைகளுக்கு கடுமையான தண்டனைகளை வழங்குதல் ஏனையவருடன் ஒப்பிட்டு மட்டம் தட்டுதல் போன்றவையும் அவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

கற்றல் சூழலில் மன அழுத்தம் ஏற்படுவதற்கு முக்கியமாக மூன்று காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றது. அதாவது சோர்வு, இழிவுபடுத்தப்படுதல்,தயார் செய்யாத நிலை என்பனவாகும். அதிகளவான மாணவர்கள் சோர்வினால் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றனர். படித்தவற்றை நினைவில் வைத்திருக்க முடியாமை , அதிகமான விடயங்களை படிக்க வேண்டி இருத்தல், தொடர்ந்த கற்றல் செயல்பாடு, ஓய்வின்றி மற்றும் ஆர்வமின்றி கற்றல் என்பதன் காரணமாக மாணவர்கள் விரைவில் மன அழுத்தத்திற்கு உட்பட்டு சோர்வடைகின்றனர். இழிவுபடுத்தப்படுதலும் ஒரு முக்கிய காரணியாக காணப்படுகின்றது வகுப்பறையில் ஆசிரியர்களால் சோம்பேறி, மக்கு மற்றும் ஏனைய விலங்குகளின் பெயர் கொண்டு அழைக்கப்படுதல், பிற நண்பர்களால் கேலிக்கு உட்படுத்தப்படுதல் ,உயர்கல்வி நிறுவனங்களில் பகிடிவதை,உட்பட அடைவு மட்டங்கள் தாழ்வாக இருக்கும் போது பெற்றோர் ,நண்பர் ,சமூகம் என்பவற்றால் இழிவுபடுத்தப்படும் போது அது கற்றல் சார்ந்த மன அழுத்தத்தை மாணவர்களிடத்தில் தூண்டுகின்றது. இதைப் போலவே கற்றல் செயற்பாட்டுக்கு தயார் அற்ற நிலையும் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. பாடங்களை அன்றன்று படிக்காமல் சேர்த்து வைத்து பரீட்சை அண்மித்ததும் படிக்க முயலுதல்.வகுப்பறையில் திடீரென ஆசிரியர் கேள்விகளை கேட்க முனைதல்,என்பனவும் தயாரற்ற நிலையால் மன அழுத்தத்தை உருவாக்குவதற்கு வாய்ப்பாக அமைகின்றது. இவ்வாறான செயல்பாடுகளால் பல்வேறுபட்ட உடலியல் உளவியல் சார்ந்த அறிகை ரீதியான தாக்கங்களுக்கு மாணவர்கள் உள்ளாகின்றனர் .

இதன் அடிப்படையில் மனித வாழ்வில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாக மன அழுத்தம் காணப்படுகின்ற போதிலும் அவற்றை முழுமையாக இல்லாது செய்வது என்பது கடினமாக இருந்தாலும் அவற்றை கையாள்வதன் ஊடாக பாதிப்பு நிலைகளில் இருந்து எம்மைக் காத்துக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு காணப்படுகின்றது. அவ் வகையில் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற கற்றல் சார் மன அழுத்தத்தை கையாளுகின்ற முறைகளாக

நேர முகாமைத்துவத்தை பின்பற்றல், திட்டமிட்டு ஒழுங்குப்படுத்தி கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்ளல்,தன்னம்பிக்கை சுய மதிப்பீடு சுய கௌரவம் போன்றவற்றை வளர்த்துக் கொள்ளுதல், ஆளிடை தொடர்புகளை சரியாக பேணிக் கொள்ளுதல் ,குடும்ப உறுப்பினர்கள் கற்றல் செயல்முறைக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குதல், விருப்புடனும் ஆர்வத்துடனும் கற்றல் செயல்பாட்டை முன்னெடுத்தல்,ஆசிரியர்கள் சிறந்த தொடர்பாடலை மாணவர்கள் மத்தியில் செயற்படுத்துதல் ,பகிடிவதைகளை இல்லாது செய்தல், மற்றும் திறன்களை ஊக்குவித்தல் இவ்வாறான செயல்பாடுகள் மூலம் கற்றல் சார்ந்த மன அழுத்தத்தை கையாள முடிவதுடன் பொதுவான சில மன அழுத்த சிகிச்சை முறைகளையும் பயன்படுத்தலாம் .சுவாசப் பயிற்சி,சாந்தியாசனம் ,மந்திர உச்சாடனம்,தியானம் ,மனதுக்கு பிடித்த சூழலில் இருத்தல் ,அக உரையாடல், இசையினை கேட்டல், அன்பானவர்களுடன் கலந்துரையாடுதல், நகைச்சுவை போக்கினை கையாளுதல், போதிய அளவு உறக்கம் ,இயற்கையை ரசித்தல் ,இவ்வாறான செயல்முறைகளின் ஊடாக மன அழுத்தத்தை சமாளிக்க முன்வரலாம். இதனூடாக மாணவர்கள் தமக்கு எழுகின்ற கற்றல் சார்ந்த மன அழுத்தங்களை கையாண்டு அதிலிருந்து மீண்டெழுந்து சிறந்த கற்றல் செயல்பாடுகளை மேற்கொண்டு தமது இலக்குகளையும் நோக்கங்களையும் அடைய இவை வாய்ப்பளிக்கின்றன.




## முஸ்லிம்களுக்கு விகாரையில் கௌரவிப்பு

கம்பளை முஸ்லிம் வாலிபர் சங்கம் பத்து வருடங்களாக தனியார் நன்கொடைகள் மூலம் சமூக நலத்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

இலங்கை சமூகத்தில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்காக தங்களை அர்ப்பணித்து செயற்படும் உறுப்பினர்களின் சேவையை பாராட்டும் மாபெரும் விழா , கம்பளை ரந்தெட்டிய ஸ்ரீ சுமனஜோதி வித்யாதன பிரிவெனா விகாரையில் நடைபெற்றது.

இதில் சமய, பீடாதிபதிகள்,பிக்குகள், கத்தோலிக்க மதகுருமார்கள், இந்து மதகுருமார்கள், மூவினங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

நவி




## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு



பதுளை மாவட்டத்தைச் சார்ந்த பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகும் 116 முன்பள்ளி ஆசிரியர்களை ஒன்று திரட்டி சுவிட்சர்லாந்து நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் தியாகி அறக்கொடை நிறுவனத்தினூடாக மாதாந்தம் 2000 ரூபாய் என்ற வகையில் கொடுப்பனவு ஒன்றை வழங்க கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் நடவடிக்கை எடுத்திருந்தார். அவுஸ்திரேலியாவிலுள்ள தன்னுடைய இரண்டாவது புதல்வனாகிய பிரவீனின் அனுசரணையோடு இந்த ஏற்பாட்டை அவர் மேற்கொண்டார். இந்நிகழ்வு ஊவா மாகாண கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.






## 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா புதன்கிழமை (19) ஆரம்பமாகியது. பல்கலைக்கழக வேந்தர் வாழ் நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் புதன்கிழமை (19) முதல் வெள்ளிக்கிழமை (21) வரை மூன்று நாள்களில் 8 அமர்வுகளாக இடம்பெறவுள்ளதுடன் இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 , 278 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெறவுள்ளனர்.

எம்.றொசாந்த்




## பெண்கள் காப்பகத்திற்கு முன்னாள் ஆளுநர் விஜயம்

காத்தான்குடி பெண்கள் காப்பகத்தின் தலைவரும் முன்னாள் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான சல்மா அமீர் ஹம்சாவின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல். எம். ஏ. ஹிஸ்புல்லாஹா விஜயம் செய்தார்.

இப் பெண்கள் காப்பகம் தொடர்பான அன்றாட நடவடிக்கைகளை பார்வையிட்டதோடு , எதிர்காலத்தில் இந்த காப்பகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இக்காப்பகத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களோடு கலந்துரையாடினார்.

எம் எஸ் எம் நூர்தீன்




## விசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு

நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட சாந்திபுர, கலாபுர, பம்பரகலை, மாகாஸ்தொட்ட, ஆனா எலிய அகிய ஐந்து கிராம சேவகர் பிரிவில் வறுமையை எதிர்கொண்டு வாழும் தெரிவு செய்யப்பட்ட 75 பேருக்கு சிறு தோட்ட விவசாய பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவு பொருட்கள் செவ்வாய்க்கிழமை(18) வழங்கி வைக்கப்பட்டன.

“அமைதி பூங்கா" எனும் தொனியில் “சக்ஸஸ் ஃபோர் லைப்" அமைப்பின் ஊடாக இந்த விவசாய பொருட்கள்,மற்றும் உணவு பொருட்கள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

ஆ.ரமேஸ்.




## கொடியேற்றம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவடி கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவத்தின் முதல் நாள் கொடியேற்றம் செவ்வாய்க்கிழமை (18) ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

வி.ரி. சகாதேவராஜா

பெங்களூரு

# பெங்களூருவில் தாக்குதல் நடத்த சதி

கர்நாடகா தலைநகர் பெங்களூருவில் தாக்குதல் நடத்த சதி செய்ததாக 5 பேரை மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்த அலைபேசிகள் வெடிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதான அந்த ஐந்து பேரும் கொடுத்த தகவலின்படி மேலும் ஐந்து பேர் தேடப்பட்டு வருவதாக மத்திய குற்றப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதான ஐந்து பேரும் கடந்த 2017 ஆம் ஆண்டு ஒரு கொலை வழக்கில் கைதாகி பெங்களூரு மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் ஆவர். சிறையில் சில தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட தொடர்பால் அவர்கள் வெடிப்பொருட்களை கையாள்வதில் பயிற்சி பெற்றுள்ளனர் என்பதும் தெரியவருகின்றது.




# 3ஆவது சுற்றுப் பாதையில் சந்திரயான்-3

சந்திரயான் -3 விண்கலத்தை 3-வது சுற்றுப்பாதைக்கு உயர்த்தும் முயற்சி வெற்றிகரமாக செய்யப்பட்டதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. நிலவு தொடர்பான ஆய்வுக்காக அனுப்பப்பட்ட சந்திரயான்-3 விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் கடந்த 14 ஆம் திகதி செலுத்தப்பட்டது.

பின்னர் ஜூலை 17-ம் திகதியன்று 2-வது சுற்றுப்பாதைக்கு சந்திரயான் -3 விண்கலத்தை உயர்த்தும் முயற்சி வெற்றி பெற்றதாக இஸ்ரோ தெரிவித்தது. இந்நிலையில், விண்கலத்தை 3-வது சுற்றுப்பாதைக்கு உயர்த்தும் பணியை தரைக் கட்டுபாட்டு மையத்தில் இருந்து விஞ்ஞானிகள் வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

அடுத்தக் கட்ட உந்துதல் பணி எதிர்வரும் 20-ம் திகதி (இன்று) மேற்கொள்ளப்படும் என இஸ்ரோ அறிவித்துள்ளது. பெங்களூருவில் உள்ள தரைக் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து சந்திரயான் - 3 விண்கலத்தை, இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஒகஸ்ட் 23ம் திகதி நிலவின் தென் துருவத்தில் தரையிறங்க உள்ள சந்திரயான் - 3, நிலவு தொடர்பான பல்வேறு ஆய்வு தகவல்களை இஸ்ரோவிற்கு அனுப்ப உள்ளது.

புதுடெல்லி

# காதலருடன் தப்பிச் செல்ல முயன்ற பாக். பெண் கைது



காதலருடன் புதுடெல்லிக்கு தப்பிச் செல்ல முயற்சி செய்த பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் சீமா குலாமை ஹைதரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

காதலருடன் இந்தியாவில் நிரந்தரமாக தங்க முடிவு செய்த சீமா சச்சினின் வீட்டில் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக அவர் வசித்து வந்தார். அவர் குறித்து சந்தேகம் எழுந்ததால் அப்பகுதி மக்கள் பொலிஸில் தகவல் தெரிவித்தனர்.


பொலிஸார் தேடுவதை அறிந்ததும் சச்சினும், சீமா ஹைதரும் ஹரியாணாவுக்கு தப்பிச் சென்றனர். அங்கு கைது செய்யப்பட்டனர். சீமா, அவரது 4 குழந்தைகள் ஆகியோரின் கடவுச்சீட்டுகள், அலைபேசிகளை பொலிஸார் ஏற்கெனவே பறிமுதல் செய்துள்ளனர் பாகிஸ்தான் இராணுவம், ஐஎஸ்ஐ ஆகியவற்றுடன் அவருக்குத் தொடர்பு உள்ளதா என்பது குறித்தும் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

நியூயோர்க்

# வெப்ப அலையால் சிவப்பு எச்சரிக்கை

ஐரோப்பிய நாடுகள் மற்றும் வட அமெரிக்காவில் வெயில் சுட்டெரித்து வருகிறது. வெப்ப அலை காரணமாக மக்கள் கடும் அவதி அடைந்துள்ளனர். அவர்கள் கடற்கரை உள்ளிட்ட இடங்களுக்கு படையெடுத்து வருகிறார்கள்.

வெப்ப அலையால் பலருக்கு உடல்நல பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. மேலும் தெற்கு ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் காட்டு தீ பரவி வருகிறது. இதில் கிரீஸ் நாட்டின் முக்கிய பகுதியும் அடங்கும். ஸ்பெயினின் தெற்கு பகுதியில் 111.2 டிகிரி வெப்பம் பதிவானது. வெப்ப அலை காரணமாக இத்தாலியில் 16 நகரங்களுக்கு அந்நாட்டு அரசு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.



அதிகரித்துவரும் வெப்ப அலைகளை எதிர்கொள்ள மக்கள் தயாராக வேண்டுமென ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

கென்பெர்ரா

# கடற்கரையில் ஒதுங்கியது இந்திய ரொக்கெட் இயந்திரமா?

அவுஸ்திரேலியாவின் கடற்கரை பகுதியில் ஒதுங்கிய மர்ம பொருள் இந்திய ரொக்கெட் இயந்திரமாக இருக்கலாம் என ஐரோப்பிய விண்வெளி நிறுவன பொறியாளர் கருத்து தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பெர்த் நகருக்கு வடக்கே 250 கி.மீ தொலைவில் உள்ள கடற்கரை பகுதியில் மர்ம பொருள் ஒன்று கரை ஒதுங்கியது. ஒரு சிறிய கார் அளவுக்கு உருண்டையாக இருக்கும் அந்த பாகம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட ரொக்கெட் இயந்திரத்தின் பாகமாக இருக்கலாம் என அவுஸ்திரேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர். இது தொடர்பாக அவுஸ்திரேலிய விண்வெளி நிறுவனம், வெளிநாடுகளைச் சேர்ந்த விண்வெளி நிறுவனங்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள ஐரோப்பிய விண்வெளி முகமையின் பொறியாளர் ஆண்ட்ரியா பாய்ட்,



அவுஸ்திரேலிய கடற்கரையில் ஒதுங்கிய பாகம் இந்திய ரொக்கெட்டின் மேல் அடுக்கு இயந்திரம் போல் தெரிகிறது என தன்னுடன் பணியாற்றுபவர்கள் கூறுவதாக தெரிவித்துள்ளார்.

பெய்ஜிங்

# சீன வெளியுறவு அமைச்சர் எங்கே?

சீன அரசியலில் வளர்ந்து வரும் நட்சத்திரமாக அறியப்பட்டவர் வெளியுறவு அமைச்சர் கின் கேங் (57).

இவர் கடந்த ஜூன் 25-ம் திகதி இலங்கை, ரஷ்யா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினார்.

அதன் பிறகு கடந்த மூன்று வாரங்களாக அவர் பொதுவெளிக்கு வரவில்லை. அரசு சார்ந்த எந்த நிகழ்வுகளிலும் அவர் கலந்துகொள்ளவும் இல்லை. கின் கேங் இருப்பிடம் தொடர்பான எந்த தகவல்களையும் இதுவரை சீன வெளியுறவு அமைச்சகமும் பகிரங்கமாக வெளியிடவில்லை.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில்

# ஏழாமிடத்துக்கு முன்னேறிய ஜடேஜா



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் ஏழாமிடத்துக்கு இந்தியாவின் இரவீந்திர ஜடேஜா முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே 10ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தை ஜடேஜா அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவிச்சந்திரன் அஷ்வின், 2. பற் கமின்ஸ், 3. ககிஸோ றபாடா, 4. ஜேம்ஸ் அண்டர்சன், 5. ஷகீன் ஷா அஃப்ரிடி, 6. ஸ்டூவர்ட் ப்ரோட், 7. இரவீந்திர ஜடேஜா, 8. ஒலி றொபின்சன், 9. நேதன் லையன், 10. ஜஸ்பிரிட் பும்ரா.

மேற்குறித்த டெஸ்டில் 103 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் அணித்தலைவர் றோஹித் ஷர்மா, 13ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

கேன் வில்லியம்ஸன், 2. ட்ரெவிஸ் ஹெட், 3. பாபர் அஸாம், 4. ஸ்டீவ் ஸ்மித், 5. மர்னுஸ் லபுஷேன், 6. ஜோ றூட், 7. உஸ்மான் கவாஜா, 8. டரைல் மிற்செல், 9. திமுத் கருணாரத்ன, 10. றோஹித் ஷர்மா.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. அக்ஸர் பட்டேல்.



மேற்கிந்தியத் தீவுகள் எதிர் இந்தியா:

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது

மேற்கிந்தியத் தீவுகள், இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது போர்ட் ஒஃப் ஸ்பெய்னில் இன்றிரவு 7.30 மணிக்கு ஆரம்பிக்கின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே இந்தியா வென்றுள்ள நிலையில் தொடரைச் சமப்படுத்துவதற்கு இப்போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையில் காணப்படுகின்றது.

அந்தவகையில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என மூன்று பக்கமும் பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பித்தாலே இந்தியாவுக்கு சவாலளிக்க முடியும். குறிப்பாக அணித்தலைவர் கிறெய்க் பிறத்வெய்ட், உப அணித்தலைவர் ஜெர்மைன் பிளக்வூட், கேமார் றோச் ஆகியோர் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. அணியில் றேமன் றீஃபயருக்குப் பதிலாக கெவின் சின்கிளேயர் இடம்பெற்று டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணியில் மாற்றமெதுவும் இருக்காது எனக் கருதப்படுகிறது.



புளூமௌன்டன் விளையாட்டுக் கழகத்துடனான

# சிநேகபூவர் போட்டியில் வென்ற நிந்தவூர் எமரெல்ட்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

புளூமௌன்டன் விளையாட்டுக் கழகத்துடனான 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட சிநேகபூர்வ கிரிக்கட் போட்டியில் 12 ஓட்டங்களால் நிந்தவூர் எமரெல்ட் விளையாட்டுக் கழகம் வென்றது.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய எமரெல்ட், 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 168 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய புளூமௌன்டன் அணி 19.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களையே பெற்று தோல்வியடைந்தது.



தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்த

# கணேசன் சுதாகரனுக்கு கௌரவிப்பு

■ நவி

தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்ற ஆசிய வுஷு போட்டியில் கண்டி மாவட்டம் கம்பளை நகரைச்சேர்ந்த கணேசன் சுதாகரன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்திருந்தார்.

இந்நிலையில், சுதாகரனை பாராட்டி கௌரவிக்கும் வகையில் அவருக்கான ஆசீர்வாத பூஜையொன்றுகம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் முத்து மாரியம்மன் கோவில் வளாகத்தில் இருந்து பேரணியாககம்பளை நகரத்தை சுற்றி வந்தனர். இதில் அதிகளவான வாகன பேரணி மூலமாக இவர் அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், நகரங்களில் இருந்தவர்கள் அவரைவெகுவிமர்சையாக வரவேற்றனர்.

2028ஆம் ஆண்டு வரையில்

# புதிய ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட றஷ்:.போர்ட்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டில் எதிர்வரும் 2028ஆம் ஆண்டு வரையில் தொடரும் வகையிலான வாரமொன்றுக்கு 325,000 ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ்களைப் பெறும் புதிய ஒப்பந்தமொன்றில் மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் கைச்சாத்திட்டுள்ளார்.

அடுத்த ஆண்டுடன் 25 வயதான றஷ்ஃபோர்ட்டின் முன்னைய ஒப்பந்தமானது முடிவடைய இருந்தது. கடந்த பருவகாலத்தில் 56 போட்டிகளில் 30 கோல்களை றஷ்ஃபோர்ட் பெற்றிருந்தார்.

யுனைட்டெட்டில் 2016ஆம் ஆண்டு அறிமுகம் மேற்கொண்டது முதல் 359 போட்டிகளில் 123 கோல்களை றஷ்ஃபோர்ட் பெற்றுள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 20 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.